# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
# Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு. பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா. பன்னீர்செல்வம்**
**சி.ஆர். இராஜகுமார்**
**என். ஜனார்த்தனன்**
**தி. கலைச்செல்வி**
**எம். சௌந்தரராஜன்**
**ஏ. பெரியசாமி**


ஊடகச்செய்தி எண்.4/2017 நாள்,20.02.2017

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் வெளியிடும் பத்திரிகை செய்தி

## ஊடகச் செய்தி

## தமிழக முதல்வருக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வரவேற்பும் – எதிர்பார்ப்பும்

தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்தே தமிழக அரசின் நிர்வாகம் முடங்கிக் கிடக்கிறது. மக்கள் பிரச்சனைகள் பலவற்றிலும் முடிவெடுக்க முடியாமல் அல்லது யாரிடம் உத்தரவு பெற வேண்டும் என்பதில் துறைச் செயலாளர்கள் முதல் உயர் அலுவலர்கள் வரை குழப்பத்தில் இருக்கின்றனர். முன்னாள் முதல்வர் மறைவிற்குப் பின்னர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் முதல்வராக பதவியேற்று ஜல்லிக்கட்டு, வார்தா புயல், தமிழக மாணவர்கள் நீட் தேர்வு எழுதத் தேவையில்லை என்பதற்கான சட்ட முன்வடிவு போன்றவற்றில் மக்கள் பாராட்டும்படி செயல்பட்டாலும் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களின் ராஜினாமாவைத் தொடர்ந்து ஆளுநர் அவர்கள் திரு. எடப்பாடி பழனிச்சாமியை முதல்வராக பதவிப்பிரமாணம் செய்து வைத்து 15 நாட்களில் பெரும்பான்மையை சட்டசபையில் நிரூபித்துக்காட்ட உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து, சட்டசபையில் கடந்த 18-02-2017ம் தேதி சில விரும்பத்தகாத நிகழ்வுகளுக்குப் பின் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பெரும்பான்மையை நிரூபித்துள்ளதாக பேரவைத் தலைவர் அறிவித்துள்ளார். இதன் மூலம் 122 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவு கொண்ட அஇஅதிமுக அமைச்சரவை அரசமைத்துள்து.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

இந்த அரசு அமைந்தவிதம் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருந்தாலும் இப்போதைக்கு இதுவே தமிழகத்தை ஆட்சி செய்யக்கூடிய அரசு என்பதால் திரு. **எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தலைமையில் அமைந்துள்ள அரசுக்கு தமிழ்நாடு அரசு ஊழியம் சங்கம் தன்னுடைய வரவேற்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.** புதிதாக பொறுப்பேற்றுள்ள திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்களுடைய அரசு உடனடியாக கவனம் செலுத்த வேண்டிய பல விஷயங்கள் இருந்தாலும் அவற்றில் முன்னணியான ஒன்று அரசு ஊழியர்களின் பிரச்னையாகும். அரசு ஊழியர்கள் அரசுடன் இணக்கமாக இருந்தால்தான் அரசின் திட்டங்கள் மக்களுக்கு முழு அளவில் சென்றடையும். அப்போதுதான் அரசுக்கும் நற்பெயர் கிட்டும்.

அதனால் புதிதாக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் அரசு ஊழியர் சங்கத் தலைவர்களை நேரில் அழைத்து நீண்டகாலமாக நிலுவையில் உள்ள, குறிப்பாக மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் 19-02-2016 அன்று சட்டசபை கூட்டத் தொடரில் சட்டப் பேரவை விதி 110-ன் கீழ் அறிவித்த கோரிக்கைகளான புதிய பென்சன் திட்டத்தை கைவிட்டு பழைய பென்சன் திட்டத்தை தொடருதல், 8வது ஊதிய மாற்ற பரிந்துரைகளை அமல்படுத்தும் வகையில் குழு அமைத்தல், சிறப்பு காலமுறை ஊதியத்தை ஒழித்து வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்குதல், உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு அரசு ஊழியர்கள் இன்னல்களை போக்க முன்வர வேண்டும் என்றும், அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டங்கள், பேரணி மற்றும் வேலை நிறுத்தம் உள்ளிட்ட போராட்டங்கள் போன்றவற்றை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலைகளை தவிர்த்திடும் வகையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை அழைத்துப் பேசி தக்க முடிவெடுப்பதன் மூலம் அரசு ஊழியர்கள் அரசின் திட்டங்களையும், சலுகைகளையும் தொய்வின்றி மக்களுக்கு சென்று சேர்த்து மக்களும் நாடும் பயனடைய உழைக்க உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பினை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தெரிவித்துக்கொள்கிறது.

**(மு. அன்பரசு)**
பொதுச் செயலாளர்

பெறுதல்
ஆசிரியர்
அனைத்து ஊடகங்கள்